# “தர்மம் சர,,

ஜூன் (17 .6. 2026) • கும்பகோணம் • பிரதி-22

**ப்ரஹ்மஸ்ரீ குருராம கனபாடிகள் பேசுகிறார்**



## விவாஹம்: கிருஹஸ்தாச்ரம தர்மம்

ஸமாவர்த்தனம் செய்து கொண்டு 'ஸ்நாதகன்' என்ற நிலையை அடைந்தவனுக்கு, அடுத்தபடியாக தர்ம சாஸ்திரங்கள் விதிப்பது விவாஹம் எனப்படும் கிருஹஸ்தாச்ரம தர்மமாகும். பிரம்மசரியத்தில் வேதத்தை ஓதி, அதன் விரதங்களை முறைப்படி முடித்தவன், அந்த வேதத்தில் சொல்லப்பட்ட கர்மாக்களை வாழ்நாள் முழுவதும் அனுஷ்டிக்க வேண்டும்.

தனி மனிதனாக இருந்து அந்தப் பொறுப்புகளை முழுமையாகச் செய்ய முடியாது என்பதால், ஒரு தர்ம பத்னியோடு இணைந்து அவற்றைச் செய்வதற்காகவே விவாஹம் ஏற்பட்டிருக்கிறது. விவாஹம் என்பது ஆத்ம சுத்திக்கும், லோக க்ஷேமத்திற்கும் உரிய ஒரு பெரிய யக்ஞம். விவாஹத்தின் போது 'ஸஹ தர்மம் சர' (இருவரும் இணைந்து தர்மத்தை ஆசரியுங்கள்) என்று வேத மந்திரங்கள் முழங்கச் சொல்லித்தான் கன்னிகாதானம் செய்து வைக்கப்படுகிறது.

ஒரு மனிதன் பிறக்கும்போதே தேவ ருணம், ரிஷி ருணம், பித்ரு ருணம் என மூன்று விதமான கடன்களோடு பிறக்கிறான். இதில் ரிஷி ருணத்தை (ரிஷிகளுக்கான கடன்) பிரம்மசரியத்தில் வேதம் படிப்பதன் மூலம் தீர்த்துவிடுகிறான். தேவர்களுக்கு யக்ஞம் செய்வதன் மூலமும், பித்ருக்களுக்கு (முன்னோர்களுக்கு) கர்மாக்கள் மற்றும் சற்புத்திர சந்தானத்தை உருவாக்குவதன் மூலமும் மற்ற இரண்டு கடன்களைத் தீர்க்க விவாஹம் அவசியமாகிறது.

பிரம்மசரிய ஆச்ரமத்தில் தினமும் 'சமிதாதானம்' என்ற அக்னி கார்யம் செய்தவன், விவாஹ காலத்திலிருந்து 'ஔபாஸனம்' என்ற அக்னி கார்யத்தை ஆரம்பிக்கிறான். இந்த ஔபாஸன அக்னியானது அவனது வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து வர வேண்டும்.

ஆகையால், பிரம்மசரியம் எப்படி ஆத்மாவை மேம்படுத்தும் ஒரு விரதமோ, அதேபோல விவாஹமும் தர்மத்தை நிலைநிறுத்துவதற்கும், சமூகத்தை சீராக இயக்குவதற்கும் ஏற்பட்ட ஒரு புனிதமான தீக்ஷையாகும். சுருக்கமாகச் சொன்னால், பிரம்மசரியம் என்ற அஸ்திவாரத்தில் எழுப்பப்படும் தர்ம மாளிகையே விவாஹமாகும்.

**தொடரும் .**

## ஸ்ரீமதி ஸௌம்யா குருராமன்



### மராட்டியப் பேரரசின் வீராங்கனை மற்றும் சனாதன தர்மத்தின் பாதுகாவலர்

இந்திய வரலாற்றில், குறிப்பாக மராட்டியப் பேரரசின் வரலாற்றில் ராணி தாராபாயின் (கி.பி. 1675–1761) பங்கு அளப்பரியது. சத்ரபதி சிவாஜி மகராஜின் மருமகளும், சத்ரபதி ராஜாராமின் மனைவியுமான இவர், மராட்டிய சாம்ராஜ்யம் முகலாயர்களால் முழுமையாக அழிக்கப்படும் அபாயத்தில் இருந்தபோது, அதனைத் தன் தோள்களில் சுமந்து காப்பாற்றியவர்.

சனாதன தர்மத்தின் பாதுகாப்பிலும், பிராமண சமுதாயத்தின் நலனிலும் அவரது பங்களிப்புகள் வரலாற்றுச் சிறப்புமிக்கவை.சத்ரபதி சிவாஜி மகராஜ் உருவாக்கிய 'ஹிந்தவி ஸ்வராஜ்யம்' (இந்துக்களின் சுயராஜ்ஜியம்) என்ற கொள்கையை அழிந்துபோகாமல் காத்த பெருமை தாராபாயையே சாரும். ஔரங்கசீப்பின் தக்காணப் படையெடுப்பின் முக்கிய நோக்கம் மராட்டியர்களை அழிப்பதும், இஸ்லாமிய ஆட்சியை விரிவுபடுத்துவதுமே ஆகும். இந்தக் காலகட்டத்தில் பல இந்து ஆலயங்கள் இடிக்கப்பட்டன. தாராபாய் முகலாயர்களை கடுமையாக எதிர்த்துப் போராடியதன் மூலம், ஒட்டுமொத்த தென்னிந்தியாவிலும் சனாதன தர்மம் மற்றும் இந்துக்களின் கலாச்சாரம் பாதுகாக்கப்பட வழிவகுத்தார்.

தொடர் போர்களுக்கு மத்தியிலும், மராட்டியப் பகுதிகளில் இருந்த பழமையான கோவில்களைப் பாதுகாப்பதிலும், நித்ய பூஜைகள் தடையின்றி நடைபெறுவதிலும் அவர் தனிக்கவனம் செலுத்தினார்.

தனது மாமனார் சத்ரபதி சிவாஜியைப் போலவே, வேதங்கள் மற்றும் தர்ம சாத்திரங்களின் அடிப்படையிலேயே தனது நிர்வாகத்தை அவர் வழிநடத்தினார். பசுக்களையும், வேத வித்வான்களையும், பெண்களையும் காப்பது தனது தலையாய கடமையாகக் கருதினார்.

மராட்டியப் பேரரசின் நிர்வாகத்திலும், ஆன்மீக வழிகாட்டுதலிலும் ப்ராஹ்மணர்கள் மிக முக்கியப் பங்காற்றினர். தாராபாய் ப்ராஹ்மண-சமுதாயத்தின் அறிவாற்றலையும், தேச பக்தியையும் மதித்து அவர்களுக்கு உரிய அங்கீகாரத்தை வழங்கினார்.வேதப் படிப்பிற்கான மானியங்கள் போர்க்கால நெருக்கடிகளுக்கு மத்தியிலும், வேதங்கள், சாஸ்த்ரங்கள் கற்கும் பிராமண அறிஞர்களுக்கு அக்ரஹாரங்கள், நிதியுதவிகளையும் வழங்கினார். இது சனாதன தர்மத்தின் வேர்களான வேத-அனுஷ்டானங்கள் எவ்வித இடையூறுமின்றி நடைபெற உதவியது.

ராணி தாராபாய் சனாதன தர்மத்தையும், அதனைப் போற்றிப் பாதுகாத்த பிராமண சமுதாயம் உள்ளிட்ட அனைத்து இந்து மக்களையும் காத்த ஒரு மாபெரும் சாம்ராஜ்யத்தின் தாயாக வரலாற்றில் நிலைத்து நிற்கிறார்.

**लोका: समस्ता: सुखिनो भवन्तु ॥**

தொடரும்



## “அடிப்படை தர்மங்கள்”

**வித்வான் விருபாக்ஷ சர்மா**

अधितिष्ठेन्न केशांस्तु न भस्मास्थिकपालिका: ।
न कार्पासास्थि न तुषान्दीर्घमायुर्जिजीविषु: ॥

நீண்ட ஆயுளை வாழ விரும்புகின்ற ஒருவன், தரையில் கிடக்கும் கேசம் (முடி), பஸ்மம் (சாம்பல்), எலும்பு, உடைந்த பானை ஓடுகள், பருத்திப் பஞ்சு (கார்பாஸம்) மற்றும் உமி (துஷம்) ஆகியவற்றின் மீது தன் கால் படும்படி மிதிக்கக் கூடாது.

नालङ्घयेद्वत्सतन्त्रीं न प्रधावेच्च वर्षति ।

பசு அல்லது கன்றுக்குட்டியைக் கட்டியிருக்கும் கயிற்றை (வத்ஸதந்த்ரீம்) எக்காரணம் கொண்டும் தாண்டக் கூடாது (நாலங்கயேத்). அதேபோல, மழை பெய்யும் போது ஓடக்கூடாது.



**ஸ்ரீ சர்மா சாஸ்திரிகள்**

## பெரியோர்களுக்குத் தன் பெயரை உச்சரித்துக் கொண்டு அபிவாதனம் செய்யவேண்டும்.

ஆசீர்வாதத்தைப் பெறுவதற்காகச் செய்யப்படும் க்ரியை 'அபிவாதனம்' எனப்படும். வயதில் பெரியவர்களை நமஸ்கரிக்கும் ப்ராஹ்மணன், 'அபிவாதயே' என்பதற்குப் பிறகு, '__________ நாமாஹமஸ்மி' என்ற தன் பெயரை உச்சரிக்கவேண்டும்.இதற்குமேல் 'போ;' என்ற சப்தத்தை உச்சரிக்க வேண்டும். நமஸ்கரிக்கப்படு கின்றவரை, அவர் பெயரைக் கொண்டு கூப்பிடுதல் யுக்தமல்லாததால் 'போ:' என்ற சப்தத்தினால் ஸம்போதிக்க வேண்டும்.

## அத்வைத கதைகள்

வேங்கடேஷ்- பூர்வமீமாம்ஸா சிரோமணி

### ॐ ईक्षतेर्नाशब्दम् - ஓம் ஈக்ஷதேர்நாஶப்தம்

ஒரு அடர்ந்த காட்டின் நடுவே பிரம்மாண்டமான பாறை ஒன்று நீண்டகாலமாக அசைவற்று நின்றது. அவ்வழியே சென்ற மக்கள் அதை வெறும் ஒரு ஜடப் பொருளாக, உயிரற்ற கல்லாகவே பார்த்தனர். ஒருநாள், புகழ்பெற்ற சிற்பி ஒருவன் அந்தப் பாறையின் முன் வந்து நின்றான். அவன் அந்தப் பாறையைத் தொடவில்லை, கையில் உளியையும் எடுக்கவில்லை. கண்களை மூடி, அந்தப் பாறைக்குள் ஒளிந்திருக்கும் ஒரு தெய்வீக உருவத்தை தன் மனதில் "ஈக்ஷதி" (பார்த்தல்/தரிசித்தல்) செய்தான். அவனது ஆழ்ந்த சிந்தனையில், அந்தப் பாறை ஒரு அழகான சிலையாக உருமாறத் தொடங்கியது. "இந்தக் கல் உயிர்பெற வேண்டும்" என்ற அவனது ஒரு சங்கல்பம் அந்த இடத்தின் சூழலையே மாற்றியது. அடுத்த சில நாட்களில், அவனது எண்ணம் செயலாக மாற, உளியின் ஒவ்வொரு தட்டும் ஒரு திட்டமிட்ட அறிவோடு விழுந்தது. வெறும் ஜடமான கல், அறிவற்ற நிலையில் தானாகவே சிலையாக மாறிவிடவில்லை. சிற்பியின் 'அறிவு' கலக்காமல் அந்தப் பாறை கலைப்படைப்பாக மாறியிருக்க முடியாது.

இதைக் கண்ட ஒரு சீடன் கேட்டான், "குருவே, கல் என்பது அறிவற்றது தானே, அது எப்படி இவ்வளவு அழகாக மாறியது?" சிற்பி புன்னகைத்துச் சொன்னான், "கல் ஜடம் தான், ஆனால் அதன் மாற்றத்திற்குப் பின்னால் என் 'ஈக்ஷணம்' (பார்வை/எண்ணம்) இருக்கிறது." இதுவே பிரபஞ்சத்தின் ரகசியமும் கூட; இந்தப் உலகம் தானாகத் தோன்றிய தற்செயல் நிகழ்வு அல்ல. ஒரு மட்பாண்டம் உருவாக குயவனின் அறிவு தேவைப்படுவது போல, இந்தப் பேரண்டம் உருவாக ஒரு பேரறிவு (ஈஸ்வரன்) தேவை. வேதம் சொல்லும் 'சப்தம்' (ஒலி/சொல்) கூட அந்தப் பேரறிவின் சங்கல்பத்தையே சுட்டிக்காட்டுகிறது. "நான் பலவாகக்கடவேன்" (பஹுஸ்யாம் ப்ரஜாயேயேதி) என்ற அந்த முதல் எண்ணமே படைப்பின் தொடக்கம். ஜடமான இயற்கை (பிரகிருதி) தானாக எதையும் திட்டமிட்டு உருவாக்கும் ஆற்றல் அற்றது. எங்கும் நிறைந்திருக்கும் அந்தப் பரம்பொருளின் 'பார்வை' பட்டதாலேயே அணுக்கள் கோள்களாகவும், உயிர்களாகவும் மாறின. அறிவுள்ள ஒருவன் இன்றி அறிவற்ற பொருள் ஒருபோதும் ஒழுங்கமைந்த படைப்பாக மாறாது என்பதை அந்தச் சிற்பி உணர்த்தினான்.எனவே, இந்தப் பிரபஞ்சம் ஒரு அறிவற்ற ஜடப்பொருள் அல்ல, அது பேரறிவின் உன்னத வெளிப்பாடு.

## “ஸம்சய நிவ்ருத்தி”

## தர்ம சாஸ்த்ர மற்றும் ஆன்மீக தொடர்பான கேள்விகள் வரவேற்கபடுகின்றன .8838515265-என்ற வாட்சப் எண்ணிற்கு உங்கள் பெயர் ஊர் பெயருடன் அனுப்பவும்.

திரு வெங்கட் என்பவர் இந்த கேள்வியை கேட்டிருக்கிறார் .
ஸ்ராத்த நாட்களில் முதல் நாளே காய்கறி நறுக்கி வைக்கலாமா?
வேஷ்டி உலர்த்தி மடியாய் எடுத்து வைக்கலாமா?

இரண்டு கேள்விக்கான பதிலும் கூடாது என்பதுதான் ஸ்ராத்தம் என்பது, அன்று செய்யப்படுகிற கர்மா .
ஸ்ராத்தத்தன்று காலையில் ஸ்நானம் செய்த பிறகு, மடியாகவே காய்கறிகளை நறுக்க வேண்டும். முதல் நாள் நறுக்கி வைப்பது 'நிஷித்தமானது' (தவிர்க்கப்பட வேண்டியது).ஸ்ராத்தத்தன்று காலையில் துவைத்து, உலர்த்திய வஸ்திரத்தையே அணிய வேண்டும்.

கடந்த மாதம் நமது பாடசாலையில் மாணவர்களுக்கான இலவசப் பல் மருத்துவ முகாம் சிறப்பாக நடைபெற்றது. சிறப்புப் பல் மருத்துவர் Dr. ஜெயகிருஷ்ண பாலசுப்ரமணியன் அவர்கள் இம்முகாமில் கலந்து கொண்டு, மாணவர்களுக்குப் பல் பரிசோதனைகளை மேற்கொண்டு, பற்களைப் பாதுகாக்கும் முறைகள் குறித்த ஆலோசனைகளை வழங்கினார்.

